ஆதிக்க வெறியல்லவாம்; அன்புப் பணிதானும்

‘ஆக்கிரமிப்பை எதிர்க்கவே ஆவன’ செய்கிருர்களாம்

இந்தியா—அமெரிக்கா காதல் களங்கமற்றதுதானும்

அமெரிக்க ஹெண்டர்சனின் அதி சாகசப் பேச்சு!

சிறுபான்மையாக இருக்கும் இதர நாடுகளின் கூட்டுறவை அமெரிக்கா நாடுவது உண்மைதான். ஐ. நா. சபை நியதிகளின்படியே அமெரிக்கா இந்தக் கூட்டுறவை நாடுகிறது ஆக்கிரமிப்பு நாடுகளுடன் ஓர் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதற்காக சிறு நாடுகளை அமெரிக்கா கைவிட்டு விடுமானல், அதுதான் மிகவும் ஒழுங்கீனமான நடவடிக்கையாகும்.

நேருஜியின் அமெரிக்க விஜயத்தால் இரு நாடுகளும் ஒன்றை யொன்று நன்ருகப் புரிந்துகொள்ள முடிந்தது.

இந்திய சர்க்கார் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் வந்துவிடுமோ வென்று இன்னும் பலர் சந்தேகம் கொண்டிருக்கின்றனர்; அப்படி ஏற்படாது.

கம்யூனிஸத்தை ஒழிப்பதற்காக அமெரிக்கா அளவு கடந்த முயற்சி செய்வதாக வேறு சிலர் கருதுகின்றனர். அதுவும் சரியல்ல.

எத்தகைய ராஜிய தத்துவத்தின் மீதும் அமெரிக்காவுக்கு விரோதமில்லே. ஆக்ரமிப்பாளருக்கு இடம் அளிக்கக் கூடாது என்பதே அமெரிக்காவின் நோக்கம்.

கொள்கை சம்பந்தமாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையே பல வித்தியாசமிருப்பதாக சிலர் கற்பனை செய்து கொள்ளுகின்றனரே யன்றி, உண்மையில் அப்படியில்லே.

அமெரிக்க தூதுவர் தோழர் லாய் ஹெண்டர்ஸன் வெளி நாட்டு உறவுக் கழகத்தில் பேசிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிருர்.

அமெரிக்கா சிறுபான்மை நாடுகளிடம் கூட்டுறவு கொள்ளுகிறதாம். இதற்கு காரணம் சின்னஞ் சிறு நாடுகளைக் கைவிடக்கூடாது என்னும் நன் நோக்கமாம். ஆகா! என்ன கருணை! ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவதற்கொப்பாகவேயுளது அமெரிக்காவின் கருணையும், இதற்கு முன்பெல்லாம் இல்லாத கருணை இரண்டாவது உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்குத் தோன்றியிருப்பது ஆச்சரியத்துக்குரியதே.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் ரஷியாவின் செல்வாக்கு மேல்நாடுகளிலெல்லாம் பரவ ஆரம்பித்துவிட்டது ஏறக்குறைய கிழக்கு ஐரோப்பா முழுமையும் கம்யூனிஸக் கொள்கையால் கவரப்பட்டு வருவது கண்கூடு. இத்தகைய நிலைமை ஏற்பட்ட பின்னரே அணுக்குண்டு தயாரிப்பில் தீவிரம், அந்நாட்டுள்ள நாடுகளுக்கு டாலர் தானம், அட்லாண்டிக் உடன்படிக்கை, அடிக்கடி ரஷியாவை எதிர்த்துப் பிரசாரம் இன்ன பிற பெரும பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது அமெரிக்காவென்ருல், இதன் பொருள் என்ன?

ஆக்ரமிப்புக்கல்ல இங்ஙனம் பாடுகளெல்லாம் என்று புதுடில்லியிலிருந்து கொண்டு தோழர் ஹெண்டர்ஸன் பேசலாம். ஆனல் சர்வதேச அரசியல் நிலை தெரிந்தோர் எளிதில் சொல்லிவிடுவர் இதெல்லாம் ரஷியாமீது அமெரிக்க கொண்டுள்ள பொருமையின் விளைவு என்று.

ஏன், அதிக தூரம் செல்வானேன்: முதல் முதல் கிரீசுக்கு 40-கோடி டாலர் கொத்து உதவ வேண்டும் என்று அமெரிக்கத் தலைவர் பிரகடனப்படுத்தியது ஏன் என்பதை அலசிப் பார்த்தாலே போதும் அமெரிக்காவின் உள்ளக்கிடக்கை தெளிவாகத் தெரிந்துவிடும். அதுமட்டுமல்ல, அங்ஙனம் டாலர் வழங்குவது பற்றி அமெரிக்காவின் முன்னுள் உதவி அமைச்சர் தோழர் ஹென்றி வாலஸ் தெரிவித்தக் கருத்துக்களே இதற்குப் போதிய சான்ருகுமே! அன்று கிரீஸ் போன்ற நாடுகளுக்கு அமெரிக்கா டாலர் வழங்க முன்வந்ததைக் கருணையின்பாற்பட்டதென்ரு கருதினுர தோழர் ஹென்றி வாலஸ்? அகம்பாவத்தின் அடையாளம் வம்பை விலைக்கு வாங்கும் வழி என்றல்லவா கருதினுர் கருதியதைக் கருதியவாறே வெளியிட்டு, அமெரிக்க ஆட்சியாளரின் ஆற்றுதலுக்கன்ருே ஆளானுர் அவர்!

இங்ஙனம் அமெரிக்க அமைச்சரே அமெரிக்காவின் உள்ளக்கிடக்கையைப் படம் பிடித்துக் காட்டி விட்டபிறகு ஹெண்டர்ஸனின் எக்காளத்தையா உலகம் மதிக்கப் போகிறது!

கம்யூனிஸத்தை ஒழிப்பது அமெரிக்காவின் நோக்கமல்லவாம். எத்தகைய ராஜிய தத்துவத்தின் மீதும் அமெரிக்காவுக்கு பகையில்லையாம்! அரசியலில் அத்தகைய பத்தினி தாங்கள் என்று பறைசாற்ற

[தொடர்ச்சி 6 பக்கம் பார்க்க]

Phone No. 4503
விலை அணு ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.
MALAIMANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (24—12—49) | வெளியீடு (25—12—49) | இதழ் 125

கல்வி வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துவிட்டது உலகப் போர்

யூனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் கருத்து

லண்டன், டிச. 23
போரினல் உலகிலேயே கல்வி அபிவிருத்தி மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது என்றும், இவ்வளவுகாலம் ஆகியும் அந்தப் போர் விளைவு எதிரொலி இன்னும் நீடிக்கிறது என்றும் யூனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் டாக்டர் ஜேம்ஸ் டொல்பேட் தான் எழுதிய புத்தகம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

பல பல்கலைக் கழகங்கள் சாதனங்கள் போர்க்காலத்தில் வீணக்கப்பட்டன என்றும், ஏராளமான பள்ளிகளும் லைப்ரரிகளும் இடிந்து தரைமட்டமாகிவிட்டனவென்றும் இவை சீர்பட்டு கல்வி அபிவிருத்தி ஓங்கச்செய்வது இனி ஒரு பெரும் காரியமாகும் என்றும் அவர் எழுதியிருக்கிருர்.

லெபனுனில் படை திரட்டல்

சென்ற திங்கட் கிழமை முதற் கொண்டு லெபனுனில் ராணுவத்திற்கு ஆள் சேர்ப்பது ஆரம்பமாகிறது என்று கூறப்படுகிறது. ராணுவ விதிகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

சீனக் கம்யூனிஸ்டு சர்க்கார் அங்கீகாரம்

கனடா மெதுவாகவே முடிவு செய்யுமாம்

ஆட்டவா, டிச. 23—
சீனக் கம்யூனிஸ்ட் சர்க்கார் அங்கீகார விஷயமாக கனடா அவசரப்பட்டு முடிவு செய்யாதென்றும், காமன்வெல்த் மாநாட்டில் இவ்விஷயம் ஆலோசிக்கப்பட்டபின்பே தன் முடிவைத் தெரிவிக்கும் என்று, கனடா பிரதம மந்திரி லாரெண்ட் இன்று கூறினர்.

ஸ்பெயினுக்கு வர்த்தகக் கமிஷனர் ஒருவரை நியமித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கம்யூனிச ‘ஆபத்தை’த் தடுக்க நடவடிக்கைகள்

:0:

காமன்வெல்த் மாநாட்டில் முடிவு செய்யப்படுமாம்

லண்டன், டிச. 23—
ஜனவரியில் கொழும்புவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில், ஜப்பான் சமாதான உடன்படிக்கை பற்றிய பொதுக் கொள்கை, சீன, தென்கிழக்கு ஆசியா நிலைமை பற்றிய பிரச்னை, கம்யூனிச ஆபத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள், காமன்வெல்த் பொருளாதார பிரச்சினைகள் முதலியவைகள் பற்றி விவாதிக்க படவிருக்கிறது என்று ‘ஈவினிங் நியூஸ்’ அரசியல் நிருபர் எழுதுகிருர். (குளோப்)

கிழக்குப் பாகிஸ்தான் ‘தன் ஆட்சி உரிமை’ கோருகிறது!

(0)

‘அரசியலமைப்புரிமையில் பிரதிநிதித்வம் போதாது’

பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரம் ஆகியவற்றைத் தவிர இதர துறைகளனைத்திலும் கிழக்குப் பாகிஸ்தானுக்கு ‘முழு சுய நிர்ணய உரிமையுடை தனனுட்சி முறை’ அளிக்க வேண்டுமென கிழக்குப் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டின் கூட்டமொன்று திங்களன்று கோரியது.

கூட்டத்துக்குத் தோழர் நுருல் அமீன் தலைமை தாங்கினர்.

புதிய அரசியலில் கிழக்குப்பாகிஸ்தான் மாகாணத்தின் நலன்கள் தக்க முறையில் பாதுகாக்கப் பெற்று வரும் வகையில் மக்கள் தொகை அடிப்படையில் மத்திய சட்ட சபையில் பிரதிநிதித்வம் வழங்கப் பெற வேண்டுமென்றும் கூட்டம் கேட்டுக் கொண்டது.

கிழக்குப் பாகிஸ்தானின் பூகோள அமைப்பு, மத்திய ஆட்சிப்பீடத்திலிருந்து அதனைத் தூர விலக்கிக் கொண்டிருக்கிறதென்றும், இதனல் பற்பல சங்கடங்கள் வந்துறுகின்றன வென்றும் கூட்டம் எடுத்துக்காட்டியது. பாகிஸ்தான் அரசியல் வகுப்புக் கமிட்டியில் கிழக்கு வங்கத்துக்குத் தக்க பிரதிநிதித்வம் அளிக்கப்படவில்லையென்பதை யெடுத்துக் காட்டி, வருத்தம் தெரிவித்து ஆவன செய்யவேண்டியது கூட்டம்.

இந்தியாவில் அரசுப் பிரதிநிதிகள்

தலைவர் பதவியை லாம்பிங் பெறுவர்

புதுடில்லி, டிச. 21—
சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரை இந்தியா அங்கீகரிக்கும் பட்சத்தில் இந்தியாவில் அரசப்பிரதிநிதிகளில் தலைவராக இருக்கும் (டோயன்) பதவியை சின்ன ஜின் லோ விட சிருந்த வேறொருவருக்கு மாற்றும் படியாக இருக்கும்.

டோயன் என்ற இப்பதவியை வகிப்பவர், ஸீனியர் ராஜதந்திரியாக இருக்கவேண்டியது அவசியம், ஹைகமிஷனர்கள் இப்பதவி ஏற்கமாட்டாராம். இப்பொழுது டாக்டர் லோதான் ஸீனியாரா யால் அவர் டோயனுக இருந்து வருகிருர். இவருக்கு அடுத்தபடி ஸீனியரான லாம்பின் தான் இப்பதவிக்கு வரவிருக்கிருர்.

உலகமறிந்த முப்பெருந் தலைவர்கள்

லண்டன், டிச 23—
“மிகமிக பிரசித்திப் பெற்ற தலைவர்கள் மூவரில், சந்தேகத்திற்கு இடமின்றி பண்டித நேருவே உலகம் அறிந்த ஒப்பற்ற தலைவர். அவர் அன்பே உருவானவர். அவருடையசுபாவத்திலிருந்தே அவரிடம் விரோதபாவனைப்பான்மை என்பது கொஞ்சம்கூட இல்லை என்பது வெளியாகிறதே” என்று, ஸ்காட்ஸ்மன் பத்திரிகையில் பிரபல விமர்சகர் ஓ. எம். கிரீன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

அடுத்த இரண்டு பிரபலமான தலைவர்கள் என்றஸ்டாலினையும், மாசேதுங்கையும் சொல்லலாம் என்றும், மாசேதுங்கை இந்தப் பட்டியலில் சேர்க்கும் முன், அவர் கைதேர்ந்த ராஜதந்திரிதானு என்பது ருபிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர்.

— குளோப்

மாலை மணி

சென்னை 24—12—49 சனிக்கிழமை

தியாகத்தின் விற்பனை உரிமை!

தியாகத்தின் 'விற்பனை உரிமை'யை, மிக மிக அபூர்வமாகவும் ( ), அருமையானதாகவும் ( ) அறிவுடைமையோடும் ( ) நிர்ணயித்திருக்கும் தனிச் 'சிறப்பு' முழுவதும், சென்னை மாகாண அரசாங்கத்துக்கே உரியதாகும்! உலகிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் கூட, இந்த 'அரிய; ஆற்றல் கண்டு, அதிசயிக்கும்' என்பதில் சிறிதும் ஐயமில்லை!

அரசியல் தியாகி யார் என்பது பற்றியும், அவர்கள் தியாகத்தின் கால அளவு எவ்வளவு என்பதுபற்றியும், தியாகத்தை எந்த அளவுக்கு விற்பனை செய்யலாம் என்பது பற்றியும், சென்னை ரெவினியூ மந்திரி தோழர் சீத்தாராமர் மேல் சபைக் கூட்டத்தில் 'பாஷ்யம்' செய்துள்ளார்!

காங்கிரஸ் காரர்களுடையதாகவே—காங்கிரஸ்காரர்களாலேயே—காங்கிரஸ்காரர்களின் நன்மைக்காகவே இருந்து வரும் சென்னைக் காங்கிரஸ் அரசாங்கம், அரசியல் தியாகி என்றால் காங்கிரஸ் தியாகி தான், தியாகம் என்றால் காங்கிரஸ்காரர்கள் செய்கிற செயல்தான் என்று கொண்டிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை! என்றாலும், அது குறித்து மந்திரியார் செய்திருக்கும் வியாக்கியானம், காங்கிரஸ் ஆட்சியின் 'அழகை'—'தெளிவை'— நேர்மையை'— 'நீதியை' விளக்குவதாக அமைந்திருக்கின்றது.

"அரசியல் தியாகி என்றால் இந்திய தேசிய காங்கிரஸினால் ஆரம்பிக்கப்பட்ட அல்லது அதன் அனுமதி பெற்ற அரசியல் இயக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டவர் என்று அர்த்தம்"

இது மந்திரியின் விளக்கம். அரசியல் தியாக உணர்ச்சி காங்கிரஸ்காரர்களிடம் மட்டுந்தான் இருக்கமுடியுமாம்; வேறு எவரிடத்திலும் இருக்கமுடியாதாம்! 'அரசியல் தியாகி' என்பதற்கு இதுதான் பொருள் என்று அகராதியில் எழுதிவிட்டாலும்விடும் இந்த அரசாங்கம்! அறிவுடை உலகம் என்ன கருதும் என்பதைப்பற்றித் தான் இந்த அரசாங்கத்துக்குக் கவலையில்லையே!

காங்கிரஸ் 'தியாகி'கள் என்போர் செய்து காட்டியதைப் போன்ற பாழ்பட்ட வழிகளைப் பின்பற்றாமல், சூது, வாது, வஞ்சகம், பித்தலாட்டம், புனைசுருட்டு இவை எவற்றையும் கொள்ளாமல், தூய்மை எண்ணத்தோடு, நேர்மைப்பண்போடு, நீதிஉள்ளத்தோடு, பொதுநல நோக்கமே முக்கியமாகக்கொண்டு, உடல், பொருள் ஆகியவற்றை இழந்து வரும் எண்ணற்றவர்கள், காங்கிரஸ் கூடாரத்தில் காலடி எடுத்துவைக்காமல், நாட்டுப்பணி புரிந்து வருகின்றனரே, அவர்களைப் பற்றி எல்லாம் என்ன கருதுகிறது இந்த அரசாங்கம்? அத்தகையோரை தியாகிகள் எனமதிக்க என் தயங்குகிறது? சுயகட்சி வெறியுணர்ச்சி கண்ணை மறைக்கிறதா? அல்லது காதை அடைக்கிறதா? அல்லது கருத்துதான் மந்தமாயிற்று? 'அரசியல் தியாகி'யின் அர்த்தம், காங்கிரஸ் ஆட்சியில் எத்தகைய பாசிஸ உருப்பெற்றிருக்கிறது என்பதை, மந்திரியாரின் கூற்றிலிருந்தே இனிது தெரிந்துகொள்ளலாம்.

தியாகம் என்றால் என்ன? 1940-41ல் நடைபெற்ற தனிப்பட்டோர் சத்தியாக் கிரகத்தில் கலந்து கொள்வதற்குக் காந்தியாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பட்டியலில் உள்ளவர்கள் (சத்தியாக்கிரகம் செய்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை!)-1942ல் காங்கிரஸ் கமிட்டிகளின் அத்தாட்சியுடன் தலைமறைவாக இருந்து இயக்கத்தை நடத்தியவர்கள் (எப்படிப்பட்ட அழிவு வேலையைச் செய்து உயிர். பொருள் நஷ்டம் ஏற்படும்படி செய்திருந்தாலும் பாதகமில்லை!)-தண்டனை பெறுவிடினும் தடியடிப் பிரயோகத்திற்கு உள்ளானவர்கள். (தடி இலேசாக மேலே பட்டதென்று வாயினால் சொன்னாலும் போதும்!) அரசியல் இயக்கங்களில் உண்மையில் கலந்துகொண்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டு, தண்டிக்கப்படாதவர்கள் (இவர்களும் தியாகிகள் தாம்!) அரசியல் இயக்கங்கள்சம்பந்தமாக தண்டிக்கப்பட்டவர்கள், அபராதம் செலுத்தியவர்கள் (இவர்களும் தியாகிகளே!) இவர்கள் எல்லோரும் காங்கிரஸ் அகராதிப்படி தியாகிகளே! இவர்களைவிட அதிகக் கஷ்டநஷ்டம் பட்ட தூய்மையுள்ளம் படைத்தோர் காங்கிரஸுக்கு வெளியே இருக்கிறார்களே என்றால், அவர்களெல்லாம் எப்பொழுது காங்கிரஸ்காரர்களல்லவோ, அப்பொழுதே 'தியாகிகள்' என்று அழைக்கப் படுவதற்குத் தகுதியற்றவர்களாகி விடுகிறார்கள்! இதுதான் காங்கிரஸ் மந்திரி சபையின் 'சித்தாந்தம்'!

'தியாக'த்தின் காலம் எவ்வளவு என்பதையும் மந்திரியார் விளக்குகிறார். **'காங்கிரஸ் ஸ்தாபனத்திடம் தொடர்ந்து விசுவாசமாக இருப்பவர்களுக்குத்தான் அரசியல் தியாகியாக நிலம்பெற உரிமையுண்டு"** இதுவே விளக்கம்! மேலே காட்டியுள்ளபடி 'தியாகம்' செய்த காங்கிரஸ்காரர்கள், எப்பொழுது காங்கிரஸை விட்டு விலகுகிறார்களோ அப்பொழுதே 'தியாகமும்' கரைந்து போய்விடுகிறது; நிலம்பெறும் உரிமையும் பட்டுப் போய்விடுகிறது! எவ்வளவு தெளிவு எவ்வளவு ஜனநாயக மணம் இதில் கமழ்கிறது பாருங்கள்!

மந்திரிகளுக்கு இருக்கும் 'தியாக உணர்ச்சி' சில சமயங்களில் அவர்கள் மதியைக்கூட மறைக்கச் செய்கிறது. சென்னை மேல் சபையில் தோழர் பாக்கி "அரசியல் தியாகிகள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாயில்லாதிருந்தாலும், நிலம் ஒதுக்கப்படும் என சர்க்கார் அறிவிக்கவில்லையா" என்று மந்திரியைக் கேட்கிறார். அதற்கு மந்திரியார் தரும் பதில், "ஞாபகமில்லை;" அத்தோடு நிறுத்தவில்லை, மேலும் செல்லுகிறார்; "அம்மாதிரி அறிவித்திருந்தாலும், இவ்விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து, ஏற்கனவே பிறப்பித்த உத்தரவைத் திருத்தி இன்றொரு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் அங்கத்தினர்களாயிருப்பவர்களுக்குத்தான் அரசியல் தியாகியாக நிலம்பெறஉரிமையுண்டு,என்று அதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

பரந்த நோக்கம் குறுகியது! ஏனோ தெரியவில்லை!

அரசியல் தியாகம் என்றால் அது காங்கிரஸ் தியாகம்! தியாகி என்றால் காங்கிரஸ் தியாகிதான்! தியாகி பணக்காரராக, லட்சப்பிரபுக்களாக இருந்தாலும் இருக்கலாம், ஏழையராக இருந்தாலும் இருக்கலாம் ஆனால்எல்லோர்க்கும் உரிமை உண்டு. தங்கள் 'தியாக'த்தை ஐந்து ஏக்கர் நிலத்திற்கு விற்றுவிட! அந்த '**விற்பனை உரிமை**' காங்கிரஸோடு ஒட்டிக்கொண்டிருக்கும் காலம் வரையில் தான் நீடிக்கும்! எனவே காங்கிரஸின் தொண்டரடிப் பொடி ஆழ்வார்களாகஎன்றென்றும் வாழ விரும்புவோர்க்கு மட்டும், தியாகத்தை விற்க விற்பனை உரிமை உண்டு! தியாகி ஒருவருக்கு ஐந்து ஏக்கர் நிலம், பொதுமக்கள் சொத்திலிருந்து பறித்துக்கொடுக்கப்படும் இதுவன்றோ 'ராம ராஜ்யம்' 'ராம ராஜ்யத்தின்' பலனை மக்கள் நுகரட்டும்!

அறிவுக் கதிர்!

கடவுள்களைப் படைத்த மனிதன், இப்போது அவைகளை மெள்ள மெள்ள உடைக்கத் தலைப்பட்டுவிட்டான். சுயநினைவின்றி மனிதன் கடவுள்களைப் படைத்தான்; இப்போது சுயநினைவோடு அவைகளை உடைக்கிறான். அவைகளை உடைக்கும் நீண்ட நடவடிக்கையே சுதந்தர எண்ண இயக்கம், பகுத்தறிவு இயக்கம்!

—பேரடரிக். ஜே. கோல்டு

நீதி நிர்வாக இலாகா பிரிவினை

1950 ஜனவரி 1-ந்தேதிமுதல் நீதி நிர்வாக இலாகா பிரிவினை அமலுக்கு வரப்போகும் நான்கு மாவட்டங்களுக்குமான ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகள், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுகள், அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என அறிவிக்கப்படுகிறது.

புதுக்கோட்டையில்

— "சந்திரமோகன்" —

30-12-49 வெள்ளியன்று

பிரகதாம்பாள் தியேட்டரில்

இரவு 9-30 மணிக்கு நடைபெறும்

தோழர் சி. என். அண்ணாதுரையும்,

அவரது குழுவினரும் நடிப்பார்கள்

டிக்கட் விவரம் பின்னால்

கிருஷ்ணமேனன் இந்தியா வருகை

லண்டன் டிச 23—

இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ண மேனன் இந்திய சர்க்காருடன் இந்தியா குடியரசு ஆக மாறுவது விஷயமாக ஏற்படும் சில பிரசனைகளைக் குறித்து விவாதிப்பதற்காகவே ஞாயிறன்று லண்டனை விட்டு புதுடில்லிக்குப் புறப்படுகிறார்.

சில முக்கியமான தஸ்தாவேஜிகளைப் போட்டோ எடுத்து, அப்பிரதிகளையும் அவர் தன்னுடன் கொண்டு செல்கிறார்.

ஸ்தானிகர் சர்க்காருடன் கலந்து பேசுவது சில காலம் நீடிக்கும் என்றாலும், லண்டனில் இந்தியக் குடியரசு தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர் கூடியசீக்கிரம் திரும்பி வந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா ஹவுஸ் நடத்தும் விருந்தும் விழாவிலும் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி கலந்து கொள்ளவிருக்கிறார்.

ஹங்கேரி—யு. எஸ். அரசியலுறவு அறுபடும்!

லண்டன், டிச. 23—

இரு அமெரிக்கர்களை ஹங்கேரி ரகசியப் போலீஸ் கைது செய்திருப்பதின் விளைவாக ஹங்கேரி—யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசியல் உறவு முறிவடையக்கூடும் என்று இங்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஹங்கேரிக்குச் செல்லும் அமெரிக்கர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு ஆபத்து வராமல் தடுக்க முடியும் என்ற உத்திரவாதத்தை அளிக்க முடியாதென்றும் அமெரிக்க சர்க்கார் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

அறிவிப்பு

"மாலை மணி"யில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் திருமணம், பிறப்பு, பெயரிடல், மறைவு, நன்றி அறிவிப்பு ஆகியவை பற்றின செய்திகள் யாவும் இனி **விளம்பரமாகவே** ஏற்றுக்கொள்ளப்படும். இவைகளுக்கு மட்டும் விளம்பரக் கட்டணம் ஒரு பத்தி, ஒரு அங்குலத்திற்கு ரூ 2.

(ஆ-ர)

மக்கள் மறுமலர்ச்சி மன்றம் சூளை

இம்மன்றத்தின் 2-ம் ஆண்டு விழா

25—12—49 ஞாயிறு மாலை 5-மணிக்கு

சூளை தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள நகராண்மைக் கழகப் பள்ளியில் நடைபெறும்

பன் மொழிப் புலவர்

கா அப்பாத்துரை எம்.ஏ ,எல்.டி.

அவர்கள் தலைமையில்

தோழர்கள்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,

ப. துரைக்கண்ணனுர் எம். ஏ., எல். டி.

ஆகியோர்

சொற்பொழிவாற்றுவார்கள்.

ரைன் பாலத்தில் சத்யாக்கிரகம்

முதல் 'உலகப் பிரஜையின்' தீவிரம்

லண்டன், டிச. 23—

முதல் 'உலகப் பிரஜை' என்று சொல்லிக்கொள்ளும் கேரி டேவிஸ், ஜெர்மனிக்குப் போக விரும்பி பாரிஸிலிருந்து ஸ்டிராஸ்பர்க் நோக்கி, கால்நடையாகவே கிளம்பி விட்டார். தான் உலக பிரஜை, ஆகவே எங்கு செல்லவும் பாஸ்போர்ட் கேட்கக் கூடாது என்று இவருடைய கருத்து. ரைன் நதிபாலம் வரை இவர் வந்துவிட்டார். பாஸ்போர்ட் இல்லாததால் பாலத்தைக் கடந்து மேற்கொண்டு செல்ல முடியவில்லை!

ஆகவே, இவர் பாலத்திலேயே உட்கார்ந்து கொண்டு, ஜெர்மனிக்குள் செல்ல அனுமதிக்காவிட்டால் இதை விட்டுப்போவதில்லை என்று உட்கார்ந்து விட்டார்.

'நியூஸென்ஸ்' ஆக இல்லாத வரையில் பாலத்தின் மீது அவர் எத்தனைநேரம் வேண்டுமானாலும் உட்கார்ந்திருப்பது பற்றி ஆட்சேபணையில்லை என்று, ஜெர்மன் போலீஸ் அதிகாரி கூறிவிட்டாராம். உலகப்பிரச்னைகள் பல ஜெர்மனியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்றும், ஆகவே ஜெர்மனிக்கு தான் செல்லவேண்டும் என்று டேவிஸ் கூறுகிறார்.

[கற்பனை உரையாடல் :]

கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன்]

[உரையாடுவோர் :—சிதம்பரதேசிகர், ராமசாமிசாஸ்திரி நடராசன்.
இடம்:—திருவல்லிக்கேணியில் ஒருதேசிகர் வீட்டுத்திண்ணை.
காலம் ;—மாலை]

[ராமசாமி சாஸ்திரி, சிதம்பர தேசிகர் வீட்டுக்கு வருகிறார்]

ராம: தேசிகர்வாள், தேசிகர்வாள்!

சித: ஓ! சுவாமிகள் வரணும், வரணும் நன்னாரம் உட்காருங்கோ (வீட்டின் உள் பக்கம் நோக்கி) டேய் தம்பி... ஜமக்காளத்தைக் கொண்டுவந்து போடு.

ராம: அதெல்லாம் வேண்டாம்...ஜமக்காளமும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். வெறுமனே தரையிலேயே உட்கார்ந்துக்கிறேன்.

நட:- (வெளியில் வந்து சாஸ்திரியாரைப் பார்த்துவிட்டு, ஓ! சுவாமிகளா! அவர் நம்ம வீட்டு ஜமக்காளத்திலே உட்காருவாரா! தீட்டில்லா பட்டீம்.

சித:- உஸ்! சும்மா இருடா

நட:- பின்னே என்ன அப்பா, சாஸ்திரியார் எண்ணம் எனக்குத் தெரியாதா?

ராம:- அடேயப்பா! தம்பி என்ன, வாவா வாயாடியாயிட்டாப்போலிருக்கே!(நடராஜனைப் பார்த்து) ஏண்டா தம்பி நீ கூட குருமாறு ஆயிட்டியா? சத்தகோனாட்டா இந்தமாதிரி பேச ஆரம்பிச்சிருக்கே. (தேசிகரைப் பார்த்து) ஏன் தேசிகர்வாள் பையன் அடிக்கடி அந்த திராவிடர் கட்சிக் கூட்டத்துக்கு இட்டத்துக்கும் போறானோ?

நட:- சுவாமிகளே, போதும் போதும் உப்ப விசாரணை ஜமக்காளத்திலே உட்காரமாட்டேனிறீரே, அதுக்குக் காரணம் சொல்லாமெ, நீ குருவானவர், அவனு இன்னு, பையன் அந்தக் கூட்டத்துக்குப் போறானு, இந்தக் கூட்டத்துக்குப் போறானு... இந்தக்கேள்வியெல்லாம் எதுக்கு? ஏனய்யா, நானே கேட்கிறேன் எங்க வீட்டு ஜமக்காளத்திலே உட்கார்ந்தாலே உமக்கு வரும் கேடுதானென்ன?

சித:- டேய், இதென்னடா, பெரியவாளிடத்திலே மரியாதையில்லாமே வாயாடறே!

நட:- அட, நீங்க சும்மாயிருங்கப்பா... இத்தனை நாளா உங்களோடே பழகறாரே; நம்ம வீட்டுக்கு அடிக்கடி வந்து போறவர் நீங்களும் பிராமணனைப் போலவே ஆசார அனுஷ்டானங்களெல்லாம் வைச்சுக்கிட்டிருக்கிறீங்க, அப்படி இருக்க நம்ப வீட்டு ஜமக்காளத்திலே உட்கார்ந்தா தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்கிற இப்படிப்பட்ட ஆத்மா இந்தக் காலத்திலே இருக்குன்னு யாருக்குத்தான் கோபம் வராது? நீங்களே சொல்லுங்க.

சித: அட, நீ பெரியவாளை வம்புகாணுறியே. அவங்கவங்க ஆசாரம் அவங்கவங்களுக்கு...

நட: ஐயோ! போதுமேங்க இப்படித்தான் பேசுவீங்க என்றது எனக்குத் தெரியுமே; என்று நீங்களும் பூணூல் போட்டுக்கிட்டிருக்கிறீங்களே இல்லியே! நாமும் அவாள் பிராமணங்கள் என்கிற நினைப்பு போலிருக்கு! இதோவாருங்கோ, இனிமே நீங்க இந்த வேஷமெல்லாம் போட்டுக்கலேன்னா... அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா...

ராம: ராமா! ராமா (காதைப் பொத்திக்கொண்டு) டேய், போதுண்டா போதும் உன் பிரசங்கம். ஐயா தேசிகர்வாள், அவனோடே பேச்சு நமக்கு வேண்டாம். அவன் இந்தக் காலத்து மனுஷனாயிட்டான். காலத்தின் வலுவா கெட்டுப் போச்சு! பாருங்கோ அவன் நெத்திக்கிட்டிருக்கானு பாருங்கோ... அதிலிருந்தேதான் தெரிஞ்சுண்டேன், பைமாதிட்டான்னு...

நட: [குறுக்கிட்டு] என்ன! என்ன! என்ன சொன்னீங்க சுவாமிகளே! காலம் கெட்டுப் போச்சு — நெத்திக்கிட்டுக்கலேன்னா! இது தானேய்யா நீ கண்டு பிடித்த அதிசயங்கள்? ஆகா! இதிலிருந்தும் கண்டுபிடிச்சிட்டேளே... ஏளம்பாரு...! காலம் கெட்டுப் போச்சாம்! ஐயா, நான் கேட்கிறேன்; என்னய்யா கெட்டுப்போச்சு? உங்களைப் போன்றவர்கள் ஆசார வேஷம் போட்டு ஊரை ஏமாத்த காலம் கெட்டுப்போச்சு! அவ்வளவுதானே. வேறென்னங்க கெட்டுப்போச்சு? சரி, அதிருக்கட்டும் நெத்திக்கிட்டுக்கலேன்னு சொல்லுறீங்களே, ஏன் நெத்திக்கிட்டுக்கணும். நெத்திக்கிட்டுக்காட்டா என்ன மண்டை வெடிச்சுடுமோ!

சித: அம்மாடியில்லேடா, உனக்குத் தெரியாது. 'நீறில்லா நெற்றிப் பாழ்" என்று எழுதி வச்சிருக்காங்களே பெரியவங்க!

நட: நல்லா எழுதி வச்சாங்களே! ஊரிலே சோறில்லாமே மக்கள் வயிறு காயச்சே, நெத்தியிலே நீறில்லாட்டா நெத்தி பாழாம். அடேயப்ப! கூடினீங்களே நீங்களெல்லாம். அது கிடக்கட்டும், நீறில்லா நெத்தி பாழுன்னு சொல்றீங்களே நீறு பூசி பூசி உங்க நெத்திதான் வெளுத்ததே தவிர புத்தி வெளுக்கக் காணுமே! அது இருண்டுதானே கிடக்கு!

ராம: அடேயப்பா! போதும் போதும்; (தேசிகரைப் பார்த்து) ஐயா, நீர் அவனண்டை வாயைக் கொடுக்காதீங்க. அவனோடே பேசி நம்மாலே சமாளிக்க முடியாது இந்தக் காலத்திலே அறிவு அந்தமாதிரி திரிஞ்சு போச்சுது!

நட:- ஆமாம், உங்க அறிவு எவ்வளவுன்னு இப்போ தெரிஞ்சு போச்சுதே! அறிவு திரிஞ்சுபோச்சுதாம் ..ஏளம்பாரு...ஏனய்யா, அறிவு என்ன பாலா திரிஞ்சு போறதுக்கு? இனிமே அப்படிச் சொல்லாதீங்க, அறிவு தெளிஞ்சு போச்சுன்னு சொல்லுங்கோ! இது [illegible] காலமல்ல, அறிவு காலம்.

ராம:- அப்பா! போதுமே, என்னு தெரிஞ்சுண்டேன் பகுத்தறிவுதான் உங்களையெல்லாம் இப்படி பாடாபடுத்துது! ஜமக்காளத்திலே உட்காரல்லேன்னு இதுக்கா இவ்வளவு பேச்சு?

நட:- பின்ன என்ன? எங்க வீட்டு ஜமக்காளத்திலே என்னைத் தீட்டுப்பிடியாயிருக்கு? என்னமோ அதைக்கண்டே அப்படி மிரண்டீங்களே. இங்கே இருக்கிறவங்களெல்லாம் என்ன, பைத்தியக்காரர்கள், நீர்தான் புத்திசாலி என்கிற நினைப்பா? இது ஏன். இந்த முட்டாள் தனமின்னு கேட்கப்படாதா?

ராம: கேளப்பா, கேள்! நன்னு கேள்.

சித: டேய் நடராஜா, என்னடா நீ சுத்த முட்டாளாயிருக்கே! பெரியவங்ககிட்ட மரியாதையா பேசடா, அவங்க மனசைப் புண்படுத்தக்கூடாதடா.

நட: ஆமாம், பெரியவங்க மனசைப் புண்படுத்தறதிலே எங்களுக்கெல்லாம் ரொம்ப ஆசை! என்னு, நாங்க விளையாட்டுப் பிள்ளைகள் பாருங்கோ! புண்படுத்தறது...புண்! அப்படிச் சொல்லாதீங்க அப்பா, (சாஸ்திரியைச் சுட்டிக்காட்டி) இந்த மாதிரி ஆட்கள், ஏன். பொதுவா உங்களைப் போன்றவங்கதான் பகுத்தறிவுவாதிகளாகிய எங்க மனசைப் புண்படுத்தறீங்க நாங்க உங்க மனசையெல்லாம் புண்படுத்தத் தோன்றியிருக்கிறோம். யோசித்துப் பேசுங்கோ.

ராம:- சரி, சரி தேசிகர்வாள், சௌமாறது நான் போயிட்டுவரேன், இப்போ மனசு நிம்மதியில்லே, வாட்டுமோ (எழுகிறார், யாரோ தும்மும் சத்தம் கேட்கிறது)

தேசி:- யாரோ தும்முறாங்க... போகலாம் உக்காருங்கோ...

நட:- [குலுக்கென சிரித்துவிட்டு] ஆமாம், ஆமாம்போகவே போகாதீங்கோ; இங்கேயே உட்கார்ந்திருங்கோ, அதோ, தெருவிலே ஒரு பூனை நிற்கிறது. அது அங்கே போயிடும், அது மட்டுமில்லை இப்போ ராகு காலம் எந்த காரியமும் செய்யக் கூடாது!

ராம: ராமா! ராமா! தேசிகர்வாள், போதும் போதும் உம்மாத்துக்கு வந்து நான் பட்டபாடு! எல்லாம் நம்ம தலைவிதி!

நட: சரியாப் போச்சு! விதி வேறே குறுக்கே வந்துடுத்தா! வாழ்ந்தால் போலத்தான்! ஏன் சுவாமிகளே ஜாதகம் பார்த்துட்டு வந்தீரானே!

ராம: (தேசிகரைப் பார்த்து) ஓய், தேசிகர்வாள், பய ரொம்ப தூரம் போயிட்டான் போலிருக்கு! (நடராஜனைப் பார்த்து) ஏண்டாப்பா அந்த வடக்கத்தி சு. ம. காரன் பேசின கூட்டத்துக்குப் போயிட்டு வந்தியோ?

சித: அது யார் வடக்கத்தி சு. ம. காரர்?

ராம:—[illegible] பேன்னு ஒருத்தர்.

சித: அதென்ன? வடக்கேகூடவா சு. ம. காரங்க இருக்காங்கோ?

ராம:- அதைஏன் கேட்கிறீர் பேன். அந்தம் பாஞ்சுபேசியிருக்கார் பாருங்கோ, அடடா! நம்ம சு. ம. காரா தேவலேனு சொல்லணும். இந்த மாதிரி சு. ம. காரா உலகம் பூராவிலேயும் இருக்காங்கன்னு இன்னைக்குத்தான் தெரிஞ்சுண்டேன்.

சித:- நீங்க கூட்டத்துக்குப் போயிருந்தீங்களோ?

ராம:- இல்லே....பேப்பரிலே பார்த்தேன்.

நட:- உம்! அப்படிச் சொல்லுங்கோ. அப்பா, இப்போ பார்த்தீங்களா? பகுத்தறிவுக்காரங்கன்னு யாரோ காலிக்கன்னு சொன்னீங்களே, உலகம் பூராவும் பரவிட்டு வருது பகுத்தறிவு. சரி, எனக்கு நேரமாவுது.... பட்டி மன்றத்திலே ஒரு கூட்டம் அதுக்குப் போயிட்டு வரேன் (போகிறான்)

சித: டேய் நடராஜா, பொழுதோடே வந்துடு...பனிவேளே

ராம: சரி, நானும் வரேன்,

சித: போயிட்டு வாங்க இதோ பாருங்க சாமி, நான் சொல்றேன்னு கோச்சுக்கொள்ளப்படாது....

ராம: என்ன, சொல்லுங்கோ சும்மா.

சித: ஒன்றுமில்லே.... இனிமே, நம்ம வீட்டுக்கு வந்த பையனோடே அதிகமா பேச்சு வச்சுக்காதீங்கோ. அது என்ன கழுதை, மரியாதை தெரியாமே பேசிடும்....எனக்கே வாய் விட்டு பேச பயமாயிருக்கு, மேலும் பய முன் கோபி.

ராம: ஆமாம், ஆமாம் நீர் சொல்றது வாஸ்தவம். நானு தெரிஞ்சுண்டேன். அதுமட்டுமில்லே, காலமும் மாறிண்டே வர்றது பாருங்கோ! சரி நான் வரேன். [போகிறார்]

குறிப்பு:—உரையாடற் பகுதியில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. யாரையும் குறிப்பிடுவனவல்ல

முன்னேற்றம்

[ப. சு. தண்டபாணி]

(1)

முன்னேற்றம் தனைவிரும்பி நின்றாயானால்
முழுமூடப் பழக்கமெலாம் ஒதுக்கித்தள்ளு,
தன்னேற்றம் கொண்டதொரு செருக்கால்வந்த
சாதிமதச் சங்கடங்கள் தவிர்த்துநில்லு,
பின்னேற்றம் செயத்துணிந்து உலகைஎத்திப்
பிழைபுரிவார் தம்கருத்தைப் பெயர்த்துத்தள்ளு,
பொன்னேற்றம் பெற்றபுகழ் பெரியாரேனும்
புரட்டுகளைச் செயத்துணிந்தால் எதிர்த்துநில்லு;

(2)

நில்லெதிர்த்துத் திரமதாய்க் காலப்போக்கின்
நிலமைதனைச் சரிவரநீ உணர்ந்துகொள்ளு,
சொல்லுதிர்த்துச் செயல்புரியாச் சூதர்செய்கை
தோகையற்ற மயிலாட்டம் கண்டுகொள்ளு,
வல்லவர்க்கே வாய்ப்புயெனும் வழக்கந்தன்னை
வாக்குரிமை கொண்டுடனே நொருக்கித்தள்ளு,
எல்லவர்க்கும் சுகமளிக்கும் அரசை ஆக்க
இயன்றவரை பணிபுரிய இதயம்கொள்ளு,

(3)

கொள்ளிதயம் கொண்டுடனே உழைக்கும்மக்கள்
குறையறிந்து பணிபுரிந்து நில்லுநில்லு,
துள்ளுகின்ற பணக்கொழுப்பின் துடுக்கடக்கிச்
சுகமுறவே பொருளமைப்பை மாற்றச்சொல்லு
வள்ளுவனார் பொதுமறையின் வாக்கைப்போல
வாழ்க்கையினை அன்புமய மாக்கிக்கொள்ளு
விள்ளுவதென் முன்னேற்றம் தானேவந்து
மீறுமடா இன்பநிலை உலகிற்றானே!

தூத்துக்குடியில்
நாடகம்
25—12—49
தோழர் வி. வி. ராமசாமி
அவர்கள் தலைமையில்
" நீதிதேவன் —
— மயக்கம் "
நடகம் நடைபெறும்
தோழர்கள் K. R. ராமசாமி,
C. N. அண்ணாத்துரை
மற்றும் பலர் நடிக்கிறார்கள்
O
விளம்பரம் :—
இராமலிங்கம்,
செயலாளர்,
ந. தி. மு. கழகம், தூத்துக்குடி
நாடகத்திற்கு நன்கொடையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவார்கள். பொது விற்பனை கிடையாது.

வேண்டுகோள்

தென்னார்காடு மாவட்டத்தில் என்னிடம் அங்கத்தினர் ரசீது புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் விரைவில் பூர்த்தி செய்து ரசீதுகளையும், தொகைகளையும், மாவட்டக் கழக (செயலாளர் பி. முருகசாமி அல்லது ஆர். தாஸ் கைசக்கின் ஸ்டோர், விருத்தாசலம்) மூலமாக மத்தியக் கழகத்திற்கு அனுப்பி விடுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

கு. த. பெ. பழனியப்பன்
தென்னார்காடு மாவட்ட
அமைப்பாளர்

நல்ல அரசியலுக்கு நான்குத் தூண்கள்

ராஜேந்திர பிரசாத் தரும் விளக்கம்

———(o)———

உளுத்துப்போன தூண்களால் உபயோகம் என்ன?

இந்தியாவின் புது அரசியல், குடியரசு முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது விடுதலை சமத்துவம், சகோதரத்துவம், நியாயம் ஆகியநான்கு தூண்களின் மீதுஇது நிமாணிக்கப் பட்டிருக்கிறது.

என்று லட்சுமணபுரி சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் பேசியிருக்கிறார். அதாவது, இந்திய குடியரசின் இலக்கணம் இன்னது என்பதை சுருக்கச் சொல்லி, விளக்கியிருக்கிறார். விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் நியாயம் ஆகிய நான்கும் புது அரசியலின் தூண்களாம். தூண்களுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள் அழகான பெயர்கள் தாம் ஆனால், அந்த அழகுக்கேற்ற பலம் அந்தத் தூண்களுக்கு இருக்கிறதா என்பதுதான் காண வேண்டிய விஷயம்.

தோழர் ராஜேந்திர பிரசாத் எடுத்துக்காட்டும் நான்குதன்மைகளில், முதன்மையானது விடுதலை இந்த விடுதலை, இவ்விந்திய உபகண்டத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு உண்மையான விடுதலையாக விளங்குகிறது என்று பார்த்தால், இந்நாட்டிற்குக் கிடைத்திருக்கும் விடுதலையும் கேடுகேடும் ஒன்றே யாகும் என்றுதான் நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மமான மத்திய சர்க்கார் தேவையென்ற ஒரே காரணத்தைக்காட்டி மாகாணங்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இவ்வுண்மை புது அரசியல் பற்றிய விவாதம் அ. வி. சபையில் எழுந்தபோதே பல உறுப்பினர் பேச்சின்மூலம் வெளிவந்துள்ளதை வாசகர்கள் அறிவர்.

அடுத்தபடியாக தோழர் இராஜேந்திரர் சுட்டிக்காட்டுவது, சமத்துவம். இது என்றுமே ஏட்டளவோடுதானிருந்து வருகிறதேயன்றி நடைமுறைக்கு வரும் நாள் எப்போது தெரியவில்லை. நால்வருணமும், நாலாயிர சாதிப்பிரிவுகளும் இந்நாட்டைச் சீரழித்து வருகின்றன. இவைகளிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முன்வருவாரில்லை. ஆனால் இத்தகைய நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கூட்டமும், அதனைச் சார்ந்த ஏடுகளும் ஏராளமாக உள்ளன. இந்நிலையில் சமத்துவம் தழைப்பது எங்ஙனம்?

அடுத்து, சகோதரத்வத்தைக் குறிப்பிடுகிறார். சமத்துவம சகோதரத்துவத்துக்கு அடிப்படை. அந்த அடிப்படையே செல்லரித்துப்போயிருக்கும்போது சகோதரத்வத்தை—பேய் எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

கடைசியாக உள்ளது நியாயம். இதுதான் இன்று நமக்கு அவசியமானதும் அவசரமானதும் தேவைப்படும் சக்தியுமே ஆகும். இந்த சக்தியைத் தான் இருக்கும் நீதிமன்றங்கள் கூற படுகிறது. அவசரச் சட்டங்கள் மூலம், நீதியும் நேர்மையும் கொலை செய்யப்படுகிறது.

இங்ஙனம், தோழர் இராஜேந்திர பிரசாத் சுட்டிக்காட்டும் புது அரசியலின் நான்கு தூண்களும் உளுத்துப்போன தூண்களாக இருக்கும்போது, புது அரசியல் என்னும் கட்டடம் எப்படி பலம் பொருந்தியதாக இருக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

கம்யூனிஸ்டு சீன அங்கீகாரம்

பிரிட்டனுக்கு முன்பே இந்தியா முடிவைத் தெரிவித்துவிடும்

லண்டன், டிச. 22—

பிரிட்டனுக்கு முன்பே அனேகமாக கிருஸ்துமஸின் போது கம்யூனிஸ்டு சீனாவை இந்தியா அங்கீகரித்துவிடும் என்று ஈவினிங் நியூஸ் ராஜதந்திர நிருபர் எழுதுகிறார்.

பிரிட்டனும் அங்கீகாரத் திற்கான நாளை ஜனவரி முதல் வாரத்தில் நிச்சயித்து விட்டது என்றும், இதர காமன் வெல்த் நாடுகளும் தங்கள் அங்கீகாரத்தை அப்பொழுது தெரிவித்து விடும் என்றும் அவர் கூறுகிறார்.

அங்கீகரிப்பதை காலம் தாழ்த்தா விருப்பதால் கெடுதலைவிட நன்மையே அதிகம் என்று டெவின் கருதியதை பிரிட்டிஷ் மந்திரிசபை அங்கீகரித்து விட்டதாம்.

ஆப்பிரிக்க மாணவிக்கு இந்தியா செல்ல 'பாஸ்போர்ட்' மறுப்பு

டர்பன், டிச. 22—

இந்தியாவில் படிக்கச் செல்வதற்கிருந்த ஆப்பிரிக்க மாணவி லாடிடியாட்ஸாபோ என்பவருக்கு, மலான் சர்க்கார் பாஸ்போர்ட் அளிக்க மறுத்ததைக் கண்டித்து, பல்கலைக் கழக மாணவர் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. எல்லா மாணவர்களுக்கும் ஜாதி வகுப்பு வித்தியாசமில்லாமல் கல்வி கற்க வசதியளிக்க வேண்டும் என்றும், ஆகவே இவ்விஷயமாக உள்நாட்டு மந்திரி மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவில் சப்மரைன் உற்பத்தி

லண்டன், டிச. 22—

1951-க்குள் 1000 சப்மரீன்களை உற்பத்தி செய்து முடிக்க, ரஷ்யா திட்டம் போட்டிருக்கிறது என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது. இப்பொழுது 360 சப்மரைன்கள் ரஷ்யக் கடற்படையில் இருக்கிறதாம். போர்வஸட் சப்மரைன்களைப் போலவே, ரஷ்யாவும் முயற்சி செய்து வருகிறதென்று கூறப்படுகிறது.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

1-1-1950 ஞாயிறு காலை 8-மணிககு

ஆசிரியர் வேலாயுதம் பந்தலில்

(திருச்சி முருகன் டாக்கீசுக்கு அருகில்)

நடைபெறும்

தலைவர்:

தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள்

(நகரசபைத் தலைவர், கோவில்பட்டி)

துவக்கிவைப்பவர்:

தோழர் P. பழனிச்சாமி அவர்கள்

(பெத்தாம்பாளையம்)

தோழர்கள்:

C. N. அண்ணாதுரை M. A.	E. V. K. சம்பத்
இரா. நெடுஞ்செழியன் M. A.	K. V. K. சாமி
க. அன்பழகன் M. A.	K. K. நீலமேகம்
இரெ. இளம்வழுதி M. A.	M. S. இராமசாமி
பூ. கணேசன் M. A.	A. V. P. ஆசைத்தம்பி
இரா. இளஞ்செழியன் B.A. (HONS)	S. முத்து
K. A. மதியழகன் B. A.	இரா. சு. தங்கப்பழம்
N. V. நடராசன்	மு. கருணாநிதி
A. சித்தையன்	T. K. சீனிவாசன்
C. P. சிற்றரசு	M. S. சிவசாமி
S. K. சாமி	N. S. இளங்கோ
காஞ்சி. மணிமொழியார்	காஞ்சி. கல்யாணசுந்தரம்

தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், சென்னை சத்தியவாணிமுத்து

மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்

இரவு 9-30 மணிக்கு

தோழர்கள்:

C. N. அண்ணாத்துரை, K. R. இராமசாமி

மற்றும் பல தோழர்கள் நடிக்கும்

★ சந்திரமோகன் ★

நாடகம் நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம்:— வரவேற்பாளர் ரூ. 5—0—0,
பிரதிநிதி ரூ. 1—0—0. ரூ. 2—0—0 (உணவு உள்பட)
பார்வையாளர் ரூ. 0—8—0

வரவேற்புக் குழுவினர்.

ரோமுக்கு வரவிரும்பிய சீன கிருஸ்துவர்கள்

இத்தாலி அனுமதிக்க மறுப்பு

ரோம், டிச. 22—

புத்தாண்டு விழாவில் கலந்துகொள்ள ரோமுக்கு வரவிரும்பிய ஹாங்காங் சீனர்களுக்கு 'பாஸ்போர்ட்' அனுமதி அளிக்க இத்தாலிய சர்க்கார் மறுத்திருக்கிறது

இவர்கள் இங்கு வந்தபின், ஒருவேளை ஹாங்காங் திரும்பிப்போக முடியாமல் போகலாம் என்றும் ஏற்கனவே மக்கள் நெருக்கடி இத்தாலியில் அதிகம் இவிட்ட தென்றும், அதன் காரணமாகவே பாஸ்போர்ட் மறுக்கப்பட்டிருக்கிறதென்றும் இத்தாலிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

டமாஸ்கஸ், டிச 22—

சிரியாவுக்கும் ஜோர்டானுக்கும் இடையேயுள்ள பாதை திறக்கப்பட்டுவிட்டது. ஜோர

திராவிட முன்னேற்றக் கழகம்

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

381

தி. மு. கழகக் கிளைகள்

o

மோகனூர்—சிற்றூர்க்கிளை

மோகனூர், 14. 19—

இவ்வூர் தி. மு. க அமைப்புக் கூட்டம், 16—12—49ல் தோழர் கே. இராஜலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நாமக்கல் தி. மு. க செயலாளர் தி. மு. கழக நோக்கங்களையும், அமைப்பு முறைகளையும் பற்றிப் பேசினார். பின்பு, 'திராவிட முன்னேற்றக் கழகம்—மோகனூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஆர். கருப்பண்ணன், நிதிஉறுப்பினர்:—கே. நடேசவேல், விளம்பர உறுப்பினர்:—கே. இராஜலிங்கம்.

ஏனைய செயற்குழுவினர்:— கே. நடேசன் வி. பரமசிவம், எஸ். ஆறுமுகம், கே. சுந்தரம், ஆர். இராஜு, எம். பாண்டியன், கே. இரத்தினம்; எஸ். எ. ஆறுமுகம். வி. ஜி. வரதராஜன். (வி-உ)

* * *

பெங்களூர் உக்கடப்பாளையம்—நகர உட்கிளை

பெங்களூர், டிச. 20—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 18—12—49 அன்று, சென்டர் தெரு 158 என்னுள்ள இல்லத்தில் தோழர் மா. வ. மணுவேலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—பெங்களூர் நகர உக்கடப்பாளையம், உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ம. டி. இராமன்; துணைச் செயலாளர்:—த. வி. தங்கராசன். நிதிஉறுப்பினர்:—மா. வ. மணுவேல். விளம்பர உறுப்பினர்: டி. தனசிராமன், பின் தி. மு. க சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டிய முறைகளைப் பற்றி பலர் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

குன்றத்தூர்—சிற்றூர்க்கிளை

குன்றத்தூர், டிச 20—

19-12-49ல் தோழர் தி. மு. நடராசன், அவர்கள் தலைமையில் இவ்வூர் திராவிடத் தோழர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அதுபோது, இவ்வூரில் தி. மு. கழகக்கிளை அமைக்கவேண்டிய அவசியம் பற்றி பலர் விரிவாக எடுத்துரைத்தனர். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்—குன்றத்தூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—தி. மு. நடராசன், துணைச்செயலாளர்:— தி. ம. கணபதி; பொருள் உறுப்பினர்:—சா. ஷா. ஜான், விளம்பரஉறுப்பினர்:- தி. க. வேலப்பிரகாசம்.

ஏனைய செயற்குழுவினர்:—து. தணிகாசலம், கன்னம், நடராசன், தி. மு. பரமசிவம், ச. இரத்தினம், தி. க. இப்ராஹிம். பிறகு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

கீழ்ப்பாவூர்—சிற்றூர்க்கிளை

கீழ்ப்பாவூர், டிச. 20—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 11—12—49ல் தோழர் பி. ஆர். சிவன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 'திராவிட முன்னேற்றக் கழகம்—கீழ்ப்பாவூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வி. சதுரநாதன்; துணைச் செயலாளர்:—வி. எம். சங்கரமுத்து; பொருள் உறுப்பினர்:- பி. ஆர். சிவன்; விளம்பர உறுப்பினர்:-சகு. இராமநாதன். ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★ மதிப்புரை ★

India's Language Problem
இந்திய மொழிப் பிரச்னை

[ஆசிரியர்: கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. கிடைக்குமிடம்: தமிழ் இந்தியா வெளியீட்டகம், அருணாசல ஆச்சாரித் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை-5. விலை: ரூ 2—8—0]

மொழிப் பிரச்னை சுதந்திர மக்களுக்கேயன்றி, நாட்டைவிட்ட பிரதிநிதிகளுக்கும் பெருந் 'தலைவலி'யாயும் தகராறுகளை வளர்ப்பதாகவும் இருந்துவரும் இந்நிலையிலே 'இந்திய மொழிப் பிரச்னை' பற்றிய இவ்வாங்கில எளிய இனிய அழகிய நூல் அரியதொரு 'தாய்ச்சரக்காய்'த் திகழ்கிறது. அதிகார போதை, ஆதிக்க எண்ணம், வெறி விளையாட்டம் இன்ன பிறவற்றின் அடிப்படையில் ஒரு சாரார் சர்வாதிகார முறையில் திடீர் திடீரென மேற்கொண்டு வரும் முடிவுகளைத் தக்கச் சான்றுகளுடன் சாதம் வகையில் அமைந்துள்ளது இந்நூல். பண்பட்ட உலக மொழிகள் பலவற்றைப் பற்றியும் விஞ்ஞான நீதியில் ஆய்ந்துணர்ந்து படைத்துள்ள ஆசிரியர் அப்பாதுரையார் புத்தகத்தில் ஆங்காங்கு பெய்துள்ள கருத்துக்கள் பெரும் பாலனவும் 'அதிகாரப் பூர்வமானவை' எனக் கூறின், அது உயர்வு நவிற்சியாகாது.

"இந்தியா ஓரின மக்களைக் கொண்ட ஒருமைப்பாடுடைய நாடல்ல; எனவே, அதற்குப் பலமிக்க ஒரே மத்திய ஆட்சி அமைவதென்பதோ ஒருமைப்பாடு நிறை தேசிய மொழியொன்று ஏற்படுவதென்பதோ இயலாத காரியமாகும். உண்மையான அடிப்படை இனங்களென்பவை மொழிவழி மண்டலங்களேயாகும்; உண்மையான தேசிய மொழிகளென்பவை மண்டல மொழிகளேயாகும்." இவ்வண்ணம் ஆசிரியர் எடுத்துக்காட்டி பொது மொழி தேசியமொழி என்பதாக இன்று பலர் சாற்றப்பெறும் வெற்றுரைகளைக் கடிந்துள்ளார். பல்வேறு மண்டலப் பகுதிகளிடையேயும் சம்மதம், சமரசமாக வெளியிட்டக் கருத்து—இவற்றின் வழி அதிகாரத்தைப் பெறுத, இவற்றை அடிப்படையாகக் கொள்ளாத அகண்ட இந்திய ஆட்சியொன்று எப்படி உண்மையான நிரந்தரமான, அமைதிமிக்க அந்தஸ்துடைய ஜனநாயக சர்க்காராக முடியாதோ, அப்படியே மண்டல மொழிகளைத் தக்க பிரதிநித்துவத் தன்மை வகிக்க முடியாத வேறு மொழி பொது மொழியாக முடியாதென்கிறார் ஆசிரியர்; அறிவுக் கருத்தை அழகுபட அமைத்துள்ளாரென்பதை யாரே மறுக்க முடியும். பொது மொழியொன்று இன்றியமையாதது என்பார்களுக்கு மாற்ற முறைக்கும் ஆசிரியர், பொது மொழியாக இவ்விடத்தில் தாய் மொழியொன்று பக்குவமுற்று ஒரு மனதாய் ஏற்றுக்கொள்ளப் பெறும் காலம் வரும்வரை, ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக இருக்கலாம்; இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். சென்னை வரைக்கும் பொது மொழியொன்று அமையாது போமாயின், ஆங்கிலத்தைக் கைவிட்டு, தாய் மொழிகளைக் கூட்டாக சரிசம அந்தஸ்து கொடுத்து அதன் இடத்தில் வைக்கலாமென்று உரைக்கின்றார் ஆசிரியர். பொது உறவு தொடர்புக்கு திறன்மிக்க மொழி பெயர்ப்புக் குழு ஒன்றை நிறுவி அதைப்பயைப்பற்றிச் சொன்னாரென்றும், அரசியல் அந்தஸ்து எதுவும் அளிக்காது இந்தியாவுக்கென பொது தேசிய மொழியொன்றை சகல பகுதிகளுடையவும் சாதாரண நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்திக்கொள்ளலாமென்றும் குறிப்பிட்டு, இது காரியத்துக்கு தமிழ் மொழியே ஏற்றதொரு மொழி எனப் பற்பல ஆதாரங்களோடு மாருபடுத்திக் காட்டுகிறார் ஆசிரியர். மொழிப் பிரச்னையை அரசியல் கண்கொண்டும், கட்டு மன்றி இலக்கிய, வரலாற்று கண்கொண்டும் பார்க்க வேண்டுமென்பதை அறிவுறுத்துகிறது இந்நூல். தெளிவு வேண்டுவோர் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புத்தகமாகும்.

* * *

திராவிடநாடு
(முதல் பாகம்)

[ஆசிரியர்: அ. கு. பாலசுந்தரனார் பி. ஏ., எல். டி. கிடைக்குமிடம்: தனலட்சுமி பதிப்பகம், சென்னை. விலை: ரூ. 2—0—0]

திராவிடநாடென சரியாக அழைக்கப்பெறும் இந்நாட்டை சென்னை மாகாணத்தின் அமைப்பியலும், வணிக இயலும் வகைப்படுத்தத் திறம்பட கவிலப்பட்டிருக்கின்றன நூலகத்தே. இதே தன்மையில் திராவிட நாட்டின் இரா அம்சங்களையும் ஆசிரியர் எழுதப்புகுவாரேயானால், சிறந்தான நல்ல காரியமொன்றினைச் செய்தவராவார். பள்ளியாசிரியராகையால், படிப்பவர் திறன் வெளிப்படும் வகையில் நல்ல கருத்துக்களை எளிய தமிழில் தந்துள்ளார். 'திராவிடநாடு' என்ற பெயருக்கு அரசியல் வண்ணம் தீட்டிப் பார்க்காது திறந்த மனநிலையில் அரசியலார் இந்நூலைக் கண்ணுறுவரேல், பள்ளி மாணவர்கட்கு ஏற்றவையான சில நூல் கருத்துக்கள் நிரம்பவும் முழுதும் முன்னதையுணர்வர்.

* * *

புதுமை இலக்கியம்
(மாதப் பத்திரிகை)

[ஆசிரியர்:— டபுள்யூ. கோவிந்தன். கிடைக்குமிடம்:— புதுமை இலக்கியம் அலுவலகம், 233. லிங்கிச்செட்டி தெரு, சென்னை 1. விலை அணா 6]

இது ஒரு திங்கள் இலக்கிய இதழ். பெயருக்கேற்ப இது புதிய முறையிலேயே அமைந்துள்ளது. இதில் பல மேனாட்டு அறிஞர்களின் சித்திரோவியங்களும் இடம்பெறுகின்றன. மற்ற இலக்கியப் பத்திரிகைகளைவிட இது அரசியல் கருத்துக்களை அதிகமாகத் தாங்கி வெளிவருகிறது.

* * *

உடைந்த உள்ளம்

[ஆசிரியர்:— என். வீ. சுப்பிரமணியம்; வெளியிட்டோர்:— நவீன பதிப்பகம்; வேப்பேரி சென்னை விலை அணா 6]

'உடைந்த உள்ளம்' என்னும் இச்சிறு கதை குழந்தை மணம், பொருந்தா மணம், சாதிக் கட்டுப்பாடு இவற்றால் விளையும் தீமைகளை விளக்குகிறது.

* * *

மறைந்த மாவீரன் வேலாயுதம்

[ஆசிரியர்:— வேலயுததாசன்; கிடைக்குமிடம், எ. ஆர். சாமி "அறிவு நிலையம்", செயங்கொண்டம், திருச்சிமாவட்டம். விலை அணா 2]

சமுதாயத் தொண்டையே தன் வாழ்வின்குறிக்கோளாகக்கொண்டு அறிவுப் பணிபுரிந்த காரணத்தால் சில சுயநலக்காரர்களின் சூழ்ச்சிக்கு இரையான உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதத்தின் இரண்டாவது ஆண்டு நினைவாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் ஆசிரியர் வேலாயுதம் நாட்டுக்குச் செய்த தொண்டு, அவர் பேசிய பேச்சுகள்; அதனால் அவருக்குக் கிடைத்த பலன்கள் ஆகியவை மிக அழகாக நல்ல நடையில் உணர்ச்சியூட்டும் முறையில் எழுதப்பெற்றுள்ளது. இது அனைவரும் படிக்கவேண்டிய நூலாகும்.

* * *

அணைந்த விளக்கு

[ஆசிரியர்:— சாமி சிதம்பரனூர் வெளியிட்டோர்:— நவீனம் பதிப்பகம் வேப்பேரி, சென்னை விலை அணா 12]

சாமி சிதம்பரனூர் அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்நூல் ஒரு அரசியல், சமூக, சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய நாடக நூலாகும். இது 'குண்டலகேசி' என்னும் பழங்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு இனிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. படிக்கவும் நடிக்கவும் ஏற்றது.

• • •

ஜனக குமாரி

[ஆசிரியர்:— நாகை என். பாலசுப்பிரமணியம் வெளியிட்டோர்:— நவீனம் பதிப்பகம் வேப்பேரி, சென்னை. விலை ரூ 3]

தோழர் பாலசுப்ரமணியம் அவர்கள் எழுதியுள்ள 'ஜனக குமாரி' என்னும் இக்காவல் ஒரு சிறந்த துப்பறியும் நாவல். இதோர் ஆங்கில நாவலைத் தழுவி எழுதப்பட்டதேயாயினும், தமிழ் நாட்டுப் பண்பாடுகளுக்கேற்ப பக்குவமாக எழுதப்பட்டுள்ளது. ஆரம்ப முதல் கடைசிவரையில் சுவர்ச்சிகரமாக உள்ளது. படித்துப்பாருங்கள்.

விருதுநகரில் 'சந்திரமோகன்'
இரண்டு நாள் நடத்த முடிவு

விருதுநகரில் நாடகம் பார்க்க அதிக தோழர்கள் விருப்பமுள்ளவர்களாக இருப்பதால், அனைவருடைய ஆவலையும் நிறைவேற்றும்பொருட்டு 26 & 27—12—49 திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் சென்ட்ரல் சினிமாவில்,

"சந்திரமோகன்"

நாடகம் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

இரண்டு நாட்களிலும்

தோழர் அண்ணாத்துரையும், கே. ஆர். ராமசாமியும் நடிப்பார்கள்.

இரண்டு நாடகத்திற்கும் முறையே

ஊ. பு. அ. சவுந்திர பாண்டியனூர்
கே. கே. நீலமேகம்

ஆகியோர் தலைமை வகிப்பார்கள்.

அளவுக்கு ஏற்றபடி தான் டிக்கட் கொடுக்க இயலும். எனவே முன் கூட்டியோ நேரிலோ, அல்லது தபால் மூலமோ பணம் செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்ளவும்.

டிக்கட் வரியுள்பட ரூ. 5, 3, 2.

இங்ஙனம்
தி. மு. கழகத்தார்
விருதுநகர்.

பணம் செலுத்தி டிக்கட் பெறும் முகவரி:
கே. எஸ். எஸ். அய்யாசாமி,
பொருளாளர் தி. மு. கழகம்
எவரெஸ்ட் சுருட்டு கம்பெனி
விருதுநகர்.

முதல் நாள் நாடக டிக்கட் இரண்டாவது நாள் நாடகத்திற்கு செல்லாது

போகிற போக்கில்...!

"தாம் ஓய்வு பெற்றபின் 'பொதுக் கூட்டம் நடத்தும் முறை' என்பதுபற்றி ஒரு புத்தகம் எழுதப் போவதாக கவர்னர்—ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார் தெரிவித்திருக்கிறார்"

—செய்தி

144 அமுலிலிருக்கும் போதோ, அல்லது, நகர போலீஸ் சட்டம் விதிக்கப்பட்டிருக்கும் போதோ—எந்த சந்தர்ப்பத்தில் கூட்டம் நடத்தும் முறைபற்றி எழுதப் போகிறார் ஆச்சாரியாரென அயாசப் படுகிறார் 'சுதந்தரப் பிரஜை' யொருவர்.

* * *

'சர்வாதிகாரம் ஒழிக'

—ட்ரூமன்

டாலராதிகாரம் வளர்க!

* * *

"பணி செய்யக் காப்பன் வேண்டும்: பந்தியில் அவனுக்கு இடமில்லையா? தென்னாப்பிரிக்க வெள்ளையருக்கு ரெவரண்டு ஸ்காட் கேள்வி"

—செய்தித்தலைப்பு

குளம் வெட்ட சாம்பான் வேண்டும்; குளிக்க அவனுக்கு உரிமை யுண்டா? நமதுபாரத நாட்டு விஷயம் தெரியாது போலும் ரெவரண்டு ஸ்காட்டுக்கு!

* * *

காங்கிரஸை விட்டுப் போய் விட்ட பழைய தியாகிகளுக்கு நிலம் இல்லை!

—செய்தி

அந்த மாஜி தியாகிகளே உண்மையான தியாகிகள்! இரட்டைத் தியாகிகளெனினும் அமையும்! ஒன்று, அன்று தியாகம் செய்தது! இரண்டு, இன்று நிலங்களைத் தியாகம் செய்வது!

• • •

"இட்லி, தோசைக்கு ஆளில்லாமல் ஆட்டுக்கல் தானாகவே அரைக்கிறது. தேனாம்பேட்டை பொருட்காட்சியில் நானாவிதமான விசித்திரங்கள்"

—செய்தித்தலைப்பு

மகாபாரதத்தில் வருகிறதே 'மயா பஜார்' அதைவிடவா பிரமாதமாயிருந்து விடப் போகிறது!

• • •

'ஜாதி ஹிந்துக்களோடு ஹரிஜன மக்களையும் சேர்த்து விடவேண்டும்: சென்னை கவர்னர் பிரசங்கம்'

—செய்தித் தலைப்பு

இது என்ன பிரமாதம் எக்ஸெலன்ஸி! அப்படியே சேர்த்துவிட்டால் போகிறது!

* * *

'அரிபர் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பர்'

—தலைப்பு

கூத்தாடுவது மட்டும் காரியமில்லை போலும்!

* * *

'டாக்டர் சுப்பாராயன் நியமனம் மிகப்பொருத்தமே!

— பிரதமர் ராஜா

இந்தியாவில் பணியாற்ற அருகதையற்றவரென்கிறாரா?

உள்ளதைச்சொன்னால்.!

ஜோஹன்னஸ்பர்க், டிச. 2- தென்னாப்பிரிக்கா காங்கிரஸில ஆப்பிரிக்கத் தலைவர்கள் வெள்ளை ஆதிக்கத்தைத் தாக்கிப் பேசியது, மலான் ஆட்சிக்குக் கோபத்தை எழுப்பிவிட்டதாகத்தெரிகிறது. ஜூலை போர்வெற்றிநினைவுச்சின்னம் தென்னாப்பிரிக்கர்களை அவமதிக்கும் சின்னம் என்று ஒரு தலைவர் குறிப்பிட்டிருப்பதையும், மற்றும் சில தலைவர்கள் செய்த பிரசங்கங்களையும் மலான் சர்க்காரின் மந்திரிகளான ஸ்வார்டோவும், டோங்ஜெஸும் பரிசிலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

இனி இம்மாதிரி கூட்டங்களுக்கெல்லாம் தடை விதிப்பது என்று முடிவு செய்யப்படலாம் என்று தெரிகிறது. இம்மாதிரி பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாது என்ற தடை, டாக்டர் தாடுவுக்கு ஏற்கனவேயே விதிக்கப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியைசட்ட விரோதமாக்கச் செய்வது குறித்தும், வெகு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

25—12—49

பொள்ளாச்சி:—	மு. கருணாநிதி, கோ. கோபால், ஏ. வி. எம். சாமி.
திருவனந்தபுரம்:—	டி. கே. சீனிவாசன்.
பேரளம்:—	இரெ. இளம்வழுதி, தில்லைவில்லாளன், ப. சு. கணபதி, பி. எஸ். இளங்கோ

26—12—49

சேத்துப்பட்டு (வ. ஆ.):—	போளூர் சுப்ரமணியம், புலவர் கோவிந்தன், மா. நா. இரசமாணிக்கம்.

27—12—49

கீழப்பாவூர்:—	இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி.

செய்தியனுப்புவோர் கவனிக்க!

"மாலைமணி"யில் வெளியிட அனுப்பப்படும் செய்திகள் யாவும் தெளிவாகவும், மிகச் சுருக்கமாகவும், விளக்கமாகவும், நல்ல கையெழுத்தில் உடனுக்குடன் எழுதியனுப்பவேண்டுகிறோம்.

(ஆ-ர்)

பிரிட்டிஷ் கடற்படையின் சிக்கன நடவடிக்கை

சேட்டவுடன், டிச. 23

தென் அட்லாண்டிக் கடற்படையின் தலைமைஸ்தலமான விமான்ஸ்டன் கப்பல்ஸ்தலத்திலிருந்துவரும் கப்பல் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க, பிரிட்டிஷ் கடற்படை காரியாலயம் முடிவு செய்திருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. சிக்கனத்தை உத்தேசித்தே இம்மாதிரி செய்யப்படவிருக்கிறதாம். சில தென்னாப்பிரிக்கர்கள் உள்பட 20 பேர் வேலை போகும் எனத் தெரிகிறது.

கரும்பாலைகளுக்கு லைசென்ஸ்

விசாகப்பட்டினம், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணா, பெல்லாரி, தென்னார்காடு, வடார்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களில் கரும்பாலை வைக்கவும் லைசென்ஸின்றி சாறு பிழியும் வேலையில் ஈடுபடுதல் கூடாதென சர்க்கார் சட்டமொன்றை பிறப்பித்துள்ளனர். 1950-ஜனவரி 15-ந் தேதி முதல் இது அமுலுக்கு வருமென அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் வில்லம்புக்கு அமெரிக்காவில் 'கிராக்கி!'

லண்டன், டிச. 23—

பர்மிங்காம் கம்பெனி ஒன்றினால் தயாரிக்கப்படும் எஃகுவில் அம்புகளுக்கு அமெரிக்காவில் ஏக கிராக்கி ஏற்பட்டிருக்கின்றன.

மார்தினால் செய்யப்பட்ட வில்களைவிட எஃகினால் செய்யப்பட்டது இன்னும் நன்றாக சீறிப் பாய்கின்றன என்று கருதப்படுகிறது. இந்த எஃகு வில்களால் எய்தால் அம்பு வெகுதூரம் போய்ச் சேருகிறதாம்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனைசெய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை:—

சீர்காழி
அம்பாசமுத்திரம்
திருமலைராயன்பட்டினம்,
பல்லாவரம்,
சிருத்தாநெல்லூர்,
சங்கரன்கோயில்
(மைலூர்)
மங்கநல்லூர்
மழசாபுரம்
விளாத்திகுளம்
சேந்தமங்கலம்
ஓமலூர்
தனுஷ்கோடி
ஆயந்தூர் (மதுரை)
சத்தியவேடு
பாபாநாடு
நாகலாபுரம்

நிர்வாகி: "மாலை மணி"
சென்னை.

ஆசிக்க...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

கிறார் தோழர் ஹெண்டர்சன். இதற்கு விளக்கமான பதில் கூறிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. அட்லாண்டிக் ஒப்பந்தம் வெளிவந்தது. உலக மேதைகள் அதுபற்றி என்ன சொன்னார்கள் என்பதை வாசகர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அட்லாண்டிக் ஒப்பந்தம் ஏறக்குறைய ரஷியாவுக்கு விடுக்கப்பட்ட ஒரு 'சவால்' என்றுதான் கருதிற்று, இன்றும் கருதிக்கொண்டிருக்கிறது உலகம். இங்கிலையிலே அமெரிக்காவின் புகழ்பாடுவதில் அர்த்தமென்ன இருக்க முடியும் என்பதை வாசகர்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

கடைசியாக, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பின் தன்மையை விளக்கிக் காட்டுகிறார் தோழர் ஹெண்டர்ஸன். கொள்கைகள் சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே வித்தியாசமிருப்பதாக யாரோ சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்களாம்; அது தவறு; இந்தியாவும் அமெரிக்காவும் என்றும் இணைபிரியாக் காதலர்களே என்று அறுதியிட்டுக் கூறுகிறார் அந்த அமெரிக்கத் தூதுவர். தோழர் ஹெண்டர்ஸனின் பற்றுக் கருத்துக்களை நாம் மறுத்துக் கூறிய போதிலும் இக்காதலின் மட்டும் மறுக்கவில்லை. அமெரிக்க—இந்திய காதல் அத்தனையும் உண்மையென்றே ஒப்புக் கொள்ளுகிறோம். அதுமட்டுமல்ல, இந்தக் காதலைக்கண்டு நாங்கள் கலக்கமுறுகிறோம், ஏனெனில் இந்தக் காதலால் இந்தியா முதலாளித்துவப் பிடியில் சிக்கிவிடுமோ என்ற ஐயத்தால் மற்ற நாடுகளுக்கு உதவி புரிவதன் மூலம் ரஷியாவுக்கு எதிராக ஒரு முன்னணியை அமைக்கப் பார்க்கிறது அமெரிக்கா. இது உலகறிந்த உண்மை. இந்த உண்மையை மறைக்க அமெரிக்காவுக்கு 'கருணை' முலாம் பூசுகிறார் தோழர் ஹெண்டர்சன். ஆனால் இத்தகைய முலாம் பூச்சு நெடுநாளைக்கு நில்லாது என்பது திண்ணம்.

திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாடு

1—1—50-ல் நடைபெறப்போகும் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்குப்பணிபுரியத் தொண்டர்களாகச் சேர விரும்பும் தோழர்கள் 28—12—49-க்குள் மாநாட்டுப் பணிமனையில் வந்து பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

ஏ. பி. தர்மலிங்கம்
தொண்டர் படைத் தலைவர்

பெயரிடல்

திருச்சி, டிச. 18—

வீதிவிடங்கம் தோழர் சிங்காரம் (அழகவேலன்) அவர்களின் துணைவியார் தோழர் குஞ்சம்மையாருக்கு 6—12—49-ல் பிறந்த பெண் மகவுக்கு, 16—12—49-ல் தோழர் இரா. சு. பெரியசாமி அவர்களால் "கலைமணி" எனப் பெயரிடப்பட்டது.

[இதன் நினைவாக ரூ. இரண்டு வரப்பெற்றோம். நன்றி! ஆ-ர்]



ரசிகர்கள் கண்டுகளிக்கும் முறையில் படங்களை உருவாக்கும் வல்லமை படைத்த தோழர் சாமி அவர்களிடம், ஜுபிடர் சோமு "விஜயகுமாரி" படக் கதையை ஒப்படைக்கும் காட்சி. இப் படத்தில் ராஜகுமாரி. கே. ஆர். ராமசாமி, டி. எஸ். பாலையா முதலியவர்கள் நடிக்கிறார்கள். படப்பிடிப்பு அநேகமாக முடிந்துவிட்டது. 1950-ம் ஆண்டில் வெளியாகும். படங்களில் முதன்மை வாய்ந்ததாக இப் படம் இருக்குமெனக் கூறப்படுகிறது.

இனி நடப்பவை

சென்னை—ஓட்டேரி தி. மு. க. கிளையின் சார்பில் 25-12-49 ஞாயிறு காலை 10-மணிக்கு புலவர் வே. த. அர்ச்சுனனார் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும். இடம்: எண் 21, பிரிக்லின்ரோடு, ஓட்டேரி.

* * *

கீழப்பாவூர்— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 27-12-49 ல் நடைபெறும். அதுபோது, தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசுவாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருப்பூர்— இவ்வூர் வ. உ. சிதம்பரனார் வாலிபர் கழகத் துவக்க விழா, 25-12-49 மாலை 6-மணியளவில் பழைய தேரடி மைதானத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் கோபி ஜி. என். இராஜு, ஈரோடு எஸ். அப்பாவு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

* * *

சென்னை— சென்னை சித்தனைத் திய சங்கத்தின் எழாம் ஆண்டுவிழா, 25-12-49 ஞாயிறு மாலை 4-மணிக்கு முன்னாள் மேயர் தோழர் எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். இடம்:— குயப்பேட்டை, நகராண்மைக் கழக ஆண் பாடசாலை.

* * *

சென்னை— கோடம்பாக்கம் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம், 26-12-49 திங்கள் காலை 10-மணிக்கு புலியூர், சிவன் கோயில் தெரு 8-எண்ணுள்ள (தோழர் மு. இளைய பெருமாள் அவர்களின்) இல்லத்தில் நடைபெறும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

பெயரிடல்

சா. புதூர், டிச. 22—

திருச்சி மாவட்டம் சா. புதூர் தோழர் சாமியப்பா அவர்கள் மகள் தோழியர் பார்வதிக்கு 2—11—49ல் பிறந்த ஆண்மகவுக்கு "அழகிரிசாமி" எனப் பெயரிடப்பட்டது.

[இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி! ஆ-ர்]

பொழுது போக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை — இமயத்தில் நாம்

தமிழ்—சினிமா

பாரகன்	—	வாழ்க்கை
லட்சுமி	—	"
மகாராணி	—	"
கிரௌன்	—	இன்பவல்லி
செலிட்டி	—	"
பிராட்	—	பூர்வ சகோதரர்கள்
வெலிங்டன்	—	"
சரஸ்வதி	—	கன்னிகா
சினிமாசென்ட்ரல்		மனோன்மணி
பாலி	—	மாயக் குதிரை
சன்	—	லைலா—மஜ்னு
ரஹானி	—	போஜன்
பிளாஸா	—	சக்ரதாரி

ஆங்கிலம்

Minerva	—	Adventures of Don Juan
Casino	—	The Luck of the Irish
New Globe	—	The Fountainhead
New Elphinstone	—	Beautiful Blounde from Bashful Bend
Midland	—	A Night at the Opera
Roxy	—	Africa Screams

ஹிந்தி

அசோக்	—	அண்டாஜ்
பிராட்வே	—	ஷெஹனாய்
செலக்ட்	—	லாட்லி
ஸாகர்	—	வீணா
சித்திரா	—	
		இன்ஸாப் கிருஷ்ணா
ஸ்டார்	—	நமஸ்தே

காமன்பார்ம் சேரியத்தின் ஐந்தாம்படை என்றும் நீலிப் படையாகவே சண்டைக்கு ஆயத்தம் செய்து வருகிறதென்றும் சர்வதேச சோஷலிஸ்ட் மகாநாடு கமிட்டி விடுத்துள்ள அறிக்கையில் கண்டித்திருக்கிறது. — ரூடேய்

மூலவியாதிக்கு

கருணைக்கிழங்கு லேகியம்

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சகமாகும்; வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.
12 நாள் மருந்து ரூ 3—0—0
1- நாகபஸ்பம் ரூ. 2—0—0
P.S.R. பங்கஜம் வைத்யசாலை
பழனி (S. I.)

வானொலி

(25-12-49 ஞாயிறு கிழமை)

சென்னை

[211·8 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8 30 பாப்பா மலர்
9 00 வாத்ய இசை (இசைத்தட்டு)

பிற்பகல்:
1 00 குழலிசை
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 நேயர் விருப்பம் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்

மாலை:
4.00 மணி ஐயர் (இ. த.)
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6.15 ஓப். தேவகி—பாட்டு
6-45 எஸ். ஆர். சந்தானகவன்-பாட்டு

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 நால்வகை (இசைத்தட்டு)
8-00 இசை விழா ஒலிப்பதிவு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9.15 ஆங்கிலப் பேச்சு
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 வி. வ. சாம்பசிவன்-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8.15 காலை இசை (இசைத்தட்டு)
8-30 எஸ். புனிதாம்பாள்-வீணை

பிற்பகல்:
12·00 சங்கமம் (இசைத்தட்டு)
1.00 மணிமலர்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 ராஜமாணிக்கம் பிள்ளை, டி. என். சம்பந்தம் பிள்ளை இரு வயலின்கள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-10 பெண்ணுலகம்
2-30 சிம்மன் கேட்டவை (இ. த.)

மாலை:
5-00 கிறிஸ்துமஸ் தின (ஒலிப்பரப்பு
5-30 சென்னையில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 வி. வ. சாம்பசிவன்-பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரானம் (இசைத்தட்டு)
8-00 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 கே. எஸ். பின்னிகிருஷ்ண ஈசுபு—வுனூப்
10-30 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.